RNI No: TNTAM/2023/88599

# திரை மொழி

THIRAI MOZHI TAMIL MONTHLY

தமிழ் மாத இதழ்

| | | | | |
|---|---|---|---|---|
| திரை: 02 | மொழி : 06 | ஜனவரி - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
| Volume : 02 | Issue : 06 | January - 2025 | Page: 8 | Price: Rs. 10 |


# பாலா என் "HERO"

## - இயக்குநர் மணிரத்னம்

**இயக்குநர் பாலாவின் 25ம் ஆண்டு திரைப்பயண விழாவில் "இங்கு எல்லோருக்கும் மிகச்சிறந்த இயக்குநர் பாலா. ஆனா, எனக்கு அவர் ஹீரோ" என்று இயக்குநர் மணிரத்னம் பேசியதுதான் பாலாவுக்கு மணிமகுடமாகும். இது தமிழ் திரையுலகில் பேசும் பொருளாகியிருக்கிறது.**



இயக்குநர் பாலா

இயக்குநர் பாலா மற்றும் சுரேஷ் காமாட்சி தயாரிப்பில் இயக்குநர் பாலா இயக்கத்தில் அருண் விஜய் நடிப்பில் வெளியான படம் வணங்கான்.

2004 ஆம் ஆண்டு நிகழ்ந்த கோர சுனாமியால் பெற்றோரை இழந்த வாய் பேச முடியாத, காது கேளாத கோட்டி (அருண் விஜய்), தனது தங்கை தேவி (ரிதா) உடன் கன்னியாகுமரியில் வசித்து வருகிறார்.

இவர்களை சுனாமியில் இருந்து மீட்ட பாதிரியார் தனது தேவாலயத்தில் தங்கவைத்து இருவரையும் அன்பால் அரவணைக்க, அன்றாட தேவைக்கான பணத்தை கிடைக்கும் நிரந்தரமற்ற சிறுசிறு வேலை செய்து சம்பாதிக்கிறார் கோட்டி. ஆனாலும் எளிய மனிதர்களுக்கு நடக்கும் இழிசெயல்களையும் அநீதியையும் கண்டு கட்டுக்கடங்காமல் பொங்கி மதயானையாக மாறி துவம்சம் செய்கிறார் நம் 'யானை' அருண் விஜய்.

இதனிடையே, ஆம், இடையிடையே வருபவர் தானே நாயகி, அப்படி சுற்றுலா வழிகாட்டியாக வேலை செய்யும் டீனாவுக்கு (ரோஷினி பிரகாஷ்) கோட்டியின் மீது காதல்



இயக்குநர் மணிரத்னம்

கோட்டான கோட்டி காதல் யேசப்பா. அவரும் அருண் விஜயிடம் "கொஞ்சம் மௌன மொழியில் என்னை கொஞ்சிப் பேசப்பா" என்கிற ரீதியில் காதல் செய்கிறார்.

ஏழ்மை நிலை மக்களுக்கு அநியாயம் செய்பவர்களை துரத்தி துரத்தி அடிக்கும் அருண் விஜயை துரத்தி துரத்தி காதலிக்கும் ரோஷ்னி பிரகாஷ், அவர் தன்னை சட்டை செய்யவில்லை என்றாலும் எந்த எதிர்பார்ப்பும் இன்றி தன் காதலையே சேவையாக செய்கிறார். இப்படி காதலையே சேவையாக செய்பவர் சேவையை எப்படி செய்வார்?

ஆம், இறைவழிபாட்டுத் தலங்களின் வழியிலும் பள்ளிக்கூடங்களின் பக்கத்திலும் உள்ள

> பக்கம் 8ல் தொடரும்

# அநீதிகளுக்கு தலை 'வணங்கான்'!






# தமிழ் சினிமாவின் ஞானப்பழம் கே.பி.சுந்தராம்பாள்



“நடிப்பதில் மிகவும் திறமையுடையவர். ஆயினும் இவருடைய பெயரினை தமிழ் நாடெங்கும் பரவச் செய்தது இவருடைய அபாரமான சங்கீதக் கலையே. நல்ல ராக, தாள ஞானமுடையவர். நான் கண்ட அளவில் இவர்களுடைய சங்கீதத்தில் ஈடு ஜோடு இல்லாத பெருமை என்னவென்றால், இவர்கள் பக்க வாத்தியங்கள் இல்லாமலே மிகவும் இனிமையாகப்பாடும் திறமே யாம். அநேக சங்கீத வித்வான்கள் பக்க வாத்தியத்தோடு பாடுவது ஒரு மாதிரியாக இருக்கும். பக்க வாத்தியம் இல்லாமல் பாடுவது வேறு ஒரு மாதிரியாய் இருக்கும். இவரது பாட்டில் அப்படியில்லை. பக்கவாத்தியங்கள் இல்லாமல் பாடினாலும் மிகவும் காதுக்கு இனிமையாயிருக்கும். இது ஒரு அரிய குணம்” என்று பம்மல் சம்பந்த முதலியார் அவர்களால் பாராட்டப் பெற்றவர். ஞானப் பழத்தை பிழிந்து அழகிய தமிழ் சாறு கொடுத்த தன்னிகரில்லா கலைஞர் கேபிசுந்தராம்பாள். அவர்கள். கொடுமுடி பாலாம்பாள் சுந்தராம்பாள் என்னும் கே.பி.எஸ் அம்மையார் 1908 ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் தேதி திரு. கிருஷ்ணசாமி மற்றும் பாலாம்பாள் தம்பதியதற்கு மகளாக பிறந்தார். கொடுமுடி லண்டன் மிஷன் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த கே.பி.எஸ். இன் பள்ளிக்கனவுக்கு அவரது தந்தையின் மரணம் முற்றுப்புள்ளி வைத்தது. பிற்காலத்தில் தான் பாடிய “கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை” என்ற வரிகளை தம் மழலை காலத்திலேயே அனுபவித்தவர் சுந்தராம்பாள் அவர்கள். குடும்ப வறுமை கே.பி.எஸ். இன் குடும்பத்தை வாட்டி வதைத்தது. ஒரு கட்டத்தில் தன் குழந்தைகளுடன் தற்கொலை முயற்சிக்கு அவரது தாயார் ஈடுபட்ட சம்பவமும் அரங்கேறியது. அப்படிப்பட்ட கொடூரமான நாட்களை கடந்து வந்தவர்தான் கே.பி.எஸ் அவர்கள். வறியவர் உள்ளமும் வயிறும் வாடி நிற்கும்போதெல்லாம் இயற்கை அவர்களுக்கு திறமை என்னும் தீனியை அளவின்றி அள்ளிக் கொடுக்கும். அதன்படி கே.பி.எஸ் அம்மையார் அவர்களுக்கு தனித்திறமை வாய்ந்த குரல்வளம் அமையப்பெற்றது. இளம் வயதிலேயே உச்சஸ்தாயியில் பாடி உடன் விளையாடும் குழந்தைகளுக்கு கச்சேரி செய்தவர் கே.பி.எஸ்அவர்கள். சிறந்த முறையில் பாடும் கே.பி.எஸ் முறையாக சங்கீதம் படித்தவர் இல்லை, கேள்வி ஞானத்தால் இசை பயின்றவர் கே.பி.எஸ் அவர்கள். இது சுற்றி இருந்தவர்கள் மூலமாக பரவத் தொடங்கியது கோவில் கச்சேரிகளில் பாடும் வாய்ப்பு அமையப் பெறவே அதன் மூலம் சிறிது வருமானமும் வரத் தொடங்கியது பள்ளிப் படிப்பை பாதியிலேயே விட்டு விட்டு கோவில் கச்சேரிகளில் பாடிக்கொண்டிருந்தார் கே.பி.எஸ் அவர்கள்.

கே.பி.எஸ் நன்றாகப் பாடுவார் என்ற அபிப்பிராயம் பரவலாக எங்கும் பரவத்தொடங்கியது. 1914 ஆம் ஆண்டு கரூர் தாலுகா ஆபீசுக்கு முகாம் வந்திருந்த போலீஸ் டெப்டி சூப்ரின்டென்ட் ஆர்.எஸ். கிருஷ்ணசாமி சிறுமி கே.பி.எஸ்ஸின் இசையைத் தற்செயலாக கேட்டார். போற்றிப் பாராட்டி ஐம்பது ரூபாயை அன்பளிப்பாகக் கொடுத்தார். அத்துடன் ஆண்டிப்பட்டி ஜமீன்தாரிடம் சிறுமியின் திறமையை எடுத்துக்கூற, அந்த ஜமீன்தார் கே.பி.எஸ்ஸை அன்புடன் வரவேற்று பாடச் செய்தார். ஜமீன்தார் அவர்கள் தங்கச் சங்கிலி, பட்டாடை போன்றவற்றை பரிசாக அளித்து முறையாக கர்நாடக சங்கீதம் பயிற்றுவிக்கும் வாய்ப்பை உருவாக்கி தருவதாக கூறினார். ஆனால் சங்கீதம் பயில தாயாரை பிரிய வேண்டும் என்ற காரணத்தால் அந்த வாய்ப்பைத் தவறவிட்ட கே.பி.எஸ் அவர்கள். தன் கேள்வி ஞானத்தாலேயே சிறந்த முறையில் பாடல்களை பாடி மக்களை ரசிக்க வைத்தார்.

கரூரில் உள்ள தாய் மாமன்கள் வீட்டுக்கு செல்ல ரயிலில் மாமா மலைக் கொழுந்துவுடன் சென்று கொண்டிருந்த சுந்தராம்பாளைப் பார்த்த கொடுமுடியை சேர்ந்த ஒருவர், ''குழந்தே... நீ நல்லாப் பாட்டு பாடுவியாமே... எங்கே... ஒரு பாட்டு பாடேன்'' என்று விரும்பி கேட்க, சக பயணிகளும் ஆர்வத்துடன் வற்புறுத்த, மாமாவின் ஒப்புதலுடன் சுந்தராம்பாள், தனது கணீர் குரலில்.. ஓங்கி ஒலித்து ஒரு பாடலை பாடினார். அந்த பாடலை அந்த ரயில் பெட்டியில் இருந்த அனைவரும் ஆர்வமாகக் கேட்டு மகிழ்ந்தனர்.

அந்த ரயில் பெட்டியில் வந்த வேலு நாயரும், அவரது மனைவி ராஜாமணியும், சுந்தராம்பாளின் பாடலை கேட்டு ரசித்ததுடன், அவரை பாராட்டி பேசியதுடன், தான் கும்பகோணத்தில் தங்கி நாடகக் கம்பெனி நடத்தி வருவதாகவும், இப்போது கரூர் நகருக்கு நாடகம் நடத்த தனது நாடகக் குழு வந்திருப்பதையும் தெரிவித்து, உங்கள் குழந்தைக்கு நல்லா பாடும் திறமை இருக்கு. விருப்பம் இருந்தால், எங்கள் குழுவில் சேர்ந்து நடிக்க அனுப்புங்க. அவரது திறமையும் வளரும். எங்களால முடிந்த உதவியும் செய்கிறோம் என்று கூறி இருக்கிறார். முதலில் தயங்கிய சுந்தராம்பாளின் மாமா, குடும்ப வறுமை இவள் மூலம் தீரட்டும் என்று... நடிக்க சம்மதித்தார். அங்கு நடிக்க கிடைத்ததோ... குடும்ப வறுமை காரணமாக தனது குழந்தைகளையும் கிணத்தில் தள்ளி தானும் தற்கொலை செய்து கொள்ளும் நல்லதாங்கள் நாடகத்தில், நல்லதங்காளின் மூத்த பிள்ளையான ஞானசேகரன் என்ற வேடம். முதல் நாடகத்தில் ஆண் வேடத்தில் '' பசிக்குதே... வயிறு பசிக்குதே என்று மிக அருமையாக பாடி ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்ற சுந்தராம்பாள், தொடர்ந்து நாடகங்களில் நடித்து, தனது குரல் மூலம் புகழ் பெற்றார். ஓரளவுக்கு பணம் சம்பாதித்து குடும்பச் சுமையை குறைக்க உதவினார்.

இவ்வாறாக பல ஊர்களில் இவர் நடித்த நாடகம் நடைபெற்றது. அவரது குரல் வளத்தை எல்லோரும் பாராட்ட தொடங்கினர். வள்ளிதிருமணம், நந்தனார், நல்லதங்காள், கோவலன், ஞானசவுந்தரி, பவளக்கொடி என பல நாடகங்களில் நடித்து தனது பதினைந்தாவது வயதில் ஸ்த்ரீபார்ட் நிலைக்கு உயர்ந்தார். அவருடன் நடிக்கவே பல நடிகர்கள் தயங்கினார்கள். தனது நடிப்பாலும், குரல் வளத்தாலும் தங்களது வேடத்தை சாதாரணமாகி விடுவார் என்று அஞ்சினார்கள்.

1926இல் ஒன்றரை ஆண்டு ஒப்பந்தத்தில் இலங்கைக்கு சென்றார், சுந்தராம்பாள். அவருடன் ராஜப்பாட்டை வேடத்தில் நடிக்க சென்றவர்கள் மூன்று நாட்களுக்கு மேல் தாக்குபிடிக்க முடியவில்லை. சுந்தரம்பாளுடன் இணையாக நடிப்பதற்கு ஒருவருமே இல்லை என்கிற நிலை உருவானது. ஒப்பந்தக்காரருக்கு வசூல் குறைந்து நஷ்டம் ஏற்பட்டது. அப்போதுதான் கண்ணையா கம்பெனியில் தனது குரல் வளத்தால், நடிப்பால் பலரது கவனத்தைப் பெற்று புகழுடன்இருந்த செங்கோட்டை கங்காதர கிட்டப்பா என்னும் எஸ்.ஜி. கிட்டப்பா பற்றி தெரிந்து கொண்ட ஒப்பந்தகாரர் மிகுந்த பிரயாசைப்பட்டு அவரை இலங்கை அழைத்து வந்தார்கள். கிட்டப்பா உடன் கே.பி. எஸ். அவர்கள் மேடை எறிய போது அரங்கமே அதிர்ந்தது. போட்டி போட்டுக்கொண்டு இருவரும் நடிப்பதை மக்கள் மிகவும் ரசித்தனர். அரங்கம் நிரம்பி வழிந்து டிக்கெட்டுகள் அனைத்தும் விற்று தீர்ந்து ஹவுஸ்புல் போர்டு போடப்பட்ட போதிலும் மக்கள் கொட்டகைக்கு வெளியே இருந்து இவர்களது பாடல்களை கேட்டு ரசித்த நாட்களும் உண்டு. குறிப்பாக வள்ளி திருமண நாடகத்தில் சில சமயங்களில், இவர்களின் திறமைக்கு இவர்களே தீனி போட்டுக் கொள்ளும் வகையில் முருகனாக கே.பி.எஸ்ஸும் வள்ளியாக கிட்டப்பாவும் ஆண் பெண் பேதமின்றி நடித்த நாட்களும் உண்டு. இவர்களது நடிப்பை பாராட்டி இருவரையும் தேரில் ஏற்றி பவனி வந்து தங்களது கலை உணர்வை வெளிப் படுத்தினர் ரசிகர்கள்.

மேடையில் மக்களை மகிழ்வித்த இந்த ஜோடி தங்களது சொந்த வாழ்விலும் இணைய ஆசை கொண்டனர். ஆனால் கிட்டப்பாவோ ஏற்கனவே திருமணமானவர். ஆனாலும் கிட்டப்பாவை மணம் முடிப்பது என்பதில் உறுதியாக இருந்தார் சுந்தராம் பாள். 1927ல் அவரையே மணம் முடித்தார். கடைசிவரை அவரது நினைவாகவே வாழ்ந்தார். பின்னாளில், சுந்தராம்பாள் இது பற்றித் தானே வாய் திறந்து சொன்னது: “அம்மி மிதித்தோ அருந்ததி பார்த்தோ எங்கள் திருமணம் நடக்கவில்லை! அது பதிவுத்

திருமணமும் அல்ல! அது ஈசனருளால் நடந்த திருமணம்! ஜன்மாந்திரத் தொடர்பு என்பார்களே அவ்வாறு நடந்த திருமணம்!”

கிட்டப்பா அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். ஏற்கனவே காங்கிரஸ் மீது இருந்த பற்றின் காரணமாக கே.பி.எஸ் அவர்களும் கிட்டப்பா உடன் இணைந்து தீவிர பற்றாளராக மாறினார். சுதந்திர வேட்கையும் காங்கிரஸ் ஈடுபாடும் கே.பி.எஸ். வாழ்க்கையில் புதுப்பாதை அமைத்தது. சுதந்திர வேட்கை மிகுந்த பாடல்களைப் பாடி சாதாரண மக்கள் மத்தியில் சுதந்திர தாகம் ஏற்பட கே.பி.எஸ். காரணமாக இருந்தார். பல்வேறு இசைத் தட்டுகளில் கே.பி.எஸ். பாடல்கள் பதிவு செய்யப்பட்டு எங்கும் ஒலிக்கத் தொடங்கின. ஏற்கனவே 1926 முதல் கே.பி.எஸ். குரல் இசைத் தட்டுகள் மூலம் வலம் வந்தது. தமிழ் பேசும் பிரதேசங்களில் கே.பி.எஸ். குரல் ஒலித்தது.

கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் காங்கிரசில் தீவிர பற்றாளர்களாகவே வாழ்ந்து வந்தார்கள். ஆனாலும் இருவருக்கிடையில் அவ்வப்போது ஊடல் இருந்து வந்தது. கிட்டப்பாவின் குடும்பம் கே.பி.எஸ். உடன் வாழ்வதை விரும்பவில்லை. பல நாட்கள் கிட்டப்பா வீட்டுக்கு வருவதையே தவிர்த்து வந்தார். இதனால் பல துன்பங்களை கே.பி.எஸ். அனுபவித்தார். ஒரு கட்டத்துக்கு மேல் எதிர்த்து கேள்வி எழுப்பத் தொடங்கினார். இருவருக்குமான உறவில் மேலும் மேலும் விரிசல் ஏற்படத் தொடங்கியது. இருவரும் தனித்தனியாக நாடகங்கள் போட்டு வந்தனர். 1933இல் கிட்டப்பாவுக்கு உடல்நிலை மோசமாகியது. கே.பி.எஸ். அவருக்கு மருத்துவ உதவி மேற் கொண்டார். ஓரளவு தேறி வந்தார். ஆனாலும் வயிற்றுவலி பெரிதாகி 1933 டிசம்பர் 2 இல் கிட்டப்பா காலமானார். அப்போது அவருக்கு வயது 28. சுந்தராம் பாளுக்கு வயது 25. கடைசிக்காலங்களில் இருவருக்கும் நெருக்கம் இல்லாமல் இருந்திருக்கிறது. 6 ஆண்டு திருமண வாழ்வு 3 ஆண்டு பிரிவு. கடைசி 3 ஆண்டு சேர்ந்து வாழ்ந்த அந்த வாழ்க்கையே போதும் என்று வெள்ளைச்சேலையிலும், விபூதியுமாக வீட்டுக்குள் முடங்கி கிடந்தார். நீண்டகாலமாக பொதுவாழ்க்கையில் இருந்து ஒதுங்கி இருந்த கே.பி.எஸ். 1934இல் நந்தனார் நாடகத்தில் நடித்தார். தொடர்ந்து பல நாடகங்களை நடத்தி வந்தார். அவைகளில் பெரும்பாலும் அவர் ஆண் வேடம் தரித்து பெண் வேடத்துக்கு வேறு பெண் நடிகர்களை அமர்த்தியிருந்தார். இதற்கிடையில் இவரை இசை கச்சேரி வழங்கும்படி முசிறி சுப்பிரமணிய ஐயர், இந்து கஸ்தூரி சீனிவாசன் போன்றோர் முயற்சி செய்தனர். மயிலாப்பூர் ஆர்.ஆர். சபாவில் முதன்முதலாக கர்நாடக இசை ரசிகர்களுக்கான இசை விருந்தை 1936களில் வழங்கினார். பழமையான தாக அறியப்பட்ட சங்கீத கச்சேரிகளில் இருந்து கே.பி.எஸ். கச்சேரி வேறுபட்ட தாயிற்று. புதிய இசை அனுபவ பகிர்வுக்கு கே.பி.எஸ். அழைத்துச் சென்றார். அவரது சுத்தமான தமிழ் உச்சரிப்பு இசையின் நுணுக்க சக்தியால் கடத்தப்படுவது அதுவரை எவருக்கும் கிடைக்காத புதிய அனுபவமாகவே இருந்தது என்றே அன்று பலரும் குறிப் பிட்டனர். நாடக மேடையில் அடைந் திருந்த புகழ் சங்கீத மேடையிலும் கே.பி.எஸ்.க்கு கிடைத்தது.

காங்கிரஸ் பிரச்சாரங்களில் கே. பி.எஸ். தவறாது ஈடுபட்டு வந்தார். கதர் இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகிய பாடல் களையும் பாடி வந்தார். தமிழகத் தில் காங்கிரஸ் கட்சிக்கு வலிமை சேர்க்கும் முயற்சியில் கே.பி.எஸ். குரலும் பங்கு கொண்டது. காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி கே.பி.எஸ். மீது அளவு கடந்த அன்பு பாராட்டியவர். அதுபோல் கே.பி.எஸ்ம் சத்தியமூர்த்தி மீது அன்பு பாராட்டினார். தேசப்பாடல்கள் விடுதலைப்பாடல் களால் கே.பி.எஸ். புகழ் எங்கும் பரவிற்று. அவரது இசை அனுபவம் சாதாரண மனிதர்களிடையே காந்தசக்தி போல் பற்றிக்கொண்டது. கற்றவர் கல்லாதவர் என்று பாகு பாட்டிற்கு அப்பால் இசை மூலம் சமத்துவம் கண்டவர் கே.பி.எஸ். அவரது கர்நாடக இசை நுணுக்கங்கள் முறையான கற்றல் மூலம் பெற்றது அல்ல. ஆனால் அவர்களுக்கு நிகராகக் கச்சேரி செய்யும் பாங்கு நுணுக்கங்களும் ஆழங்களும் கொண்டவை. அனைவரையும் பொதுஇசை அனுபவ திரட்சிக்குள் அழைத்துச் செல்லும் மகிமை கொண்டவை. நாடகம், இசைக்கச்சேரி, இசைத்தட்டு, அரசியல் என்று இயங்கிய சுந்தராம்பாள், ஒருமுறை பிரபல பத்திரிக்கையாளரும் தேசபக்தருமான ஜி.ஏ.நடேசனின் மகளுக்கு பிரசவ நேரம் என்பதால், அவருக்கு உதவியாக இருக்க மாம்பலத்தில் உள்ள நடேசன் வீட்டுக்கு சென்றிருந்தார். அப்போது தேனாம்பேட்டையில் உள்ள சுந்தரம் பாளின் வீட்டுக்கு சென்ற காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தியும், அவரது நண்பரும், சினிமா தயாரிப்பாளருமான அசன்தாஸும் சுந்தரம்பாளின் மாமாவிடம் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, தான் நந்தனார் என்கிற படத்தை தயாரிக்க இருப்பதாகவும், அதில் நந்தனாராக நடிக்க சுந்தராம்பாளை ஒப்பந்தம் செய்து தர வேண்டும் என்றும் சுந்தரம்பாளின் மாமாவிடம் தயாரிப் பாளர் அசன்தாஸ் கேட்டிருக்கிறார். அதற்கு, “என்ன லட்ச ரூபாய் கொடுப்பீர்களா?” என்று விளையாட் டாக சுந்தரம்பாளின் மாமா கேட்டிருக் கிறார். ‘‘லட்ச ரூபாய் வேண்டுமா? தரத் தயார். இதோ முன் பணமாக இருபத்தி ஐந்தாயிரத்துக்கு செக் பிடிங்க...” என்று ஒரு செக்கை எழுதி அவரிடம் கொடுத்திருக்கிறார், அசன்தாஸ். இதெல்லாம் சுந்தராம்பாளுக்கு மறுநாள்தான் தெரிந்திருக்கிறது. “என் கணவருக்கு பிறகு வேறு எந்த ஆண் நடிகருடனும் நான் கதாநாயகியாக நடிக்க விரும்பவில்லை. ஆனால், எனக்கு ஏற்ற வேடமாக நந்தனார் இருந்ததால் நடித்தேன். குடும்ப பொறுப்புடன் மாமா முன் பணமும் வாங்கி விட்டதால் நானும் சினிமாவில் நடிக்க சம்மதித்தேன். இதுதான் சினிமாவில் நடிக்க வந்த முதல் நிகழ்ச்சி” என்று தனது முதல் பட வாய்ப்பு பற்றி தெரிவித்திருக்க்கிறார், கே.பி.சுந்தராம்பாள்.

பக்தநந்தனாரில் மொத்தம் 41 பாடல்கள். இதில் கே.பி.எஸ். பாடியவை 19 பாடல்கள். இந்தப் பாடல்கள் மூலம் திரையிசையில் கே.பி.எஸ். தனி ஆவர்த்தனம் நடத்தத் தொடங்கினார் என்றே கூறலாம். பக்த நந்தனாருக்கு பிறகு ‘மணிமேகலை’. பொம்மன் ஈராணி இயக்கிய இந்தப் படத்தில் பாபநாசம் சிவன் இசையில் பதினோரு பாடல்களை பாடி இருந்தார், கே.பி.சுந்தராம்பாள். 1938 ஆம் ஆண்டு இந்த படத்தின் படப்பிடிப்பு ஆரம்பிக்கப்பட்டு 1940 ஆம் ஆண்டு வெளியானது.

அதன் பிறகு அரசியல், இசைக் கச்சேரி என்று பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த கே.பி.சுந்தராம்பாளை அவ்வையார் படத்திற்கு அழைத்திருக் கிறார், பிரபல தயாரிப்பாளர் எஸ்.எஸ். வாசன். மிக பிரமாண்டமாக தயாரிக்கப் பட்ட அவ்வையார் படத்தை கொத்தமங் கலம் சுப்பு எழுதி, இயக்கினார். இந்த படம் 1953ஆம் ஆண்டு வெளியானது. அவ்வையார் எப்படி இருப்பார் என்பதற்கு கே.பி.சுந்தராம்பாள் உருவகப்படுத்தும் நிலை தோன்றிற்று. அந்த அளவிற்கு அவ்வையாராக வாழ்ந்தார், சுந்தராம்பாள். இந்தப் படத்தில் 48 பாடல்கள். இதில் முப்பது பாடல்களை கே.பி.சுந்தராம்பாள் பாடியிருந்தார்.

கர்நாடக சங்கீதமும் தெலுங்கு கீர்த்தனைகளும் மிகுந்த வரவேற்பை பெற்றிருந்த அந்த காலத்தில் தமிழிசைக்கு என ஒரு இயக்கத்தை தொடங்கினார் அண்ணாமலை செட்டியார் அவர்கள் 1944 இல் அண்ணாமலை செட்டியாரின் விருப்பத்தின் பேரில் நடைபெற்ற தமிழிசை முதல் மாநாட்டில் கலந்து கொண்டு இசை கச்சேரி நிகழ்த்தினார் கே.பி.சுந்தராம்பாள் அவர்கள்.

மகாத்மா காந்தியின் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார் சுந்தராம்பாள் அவர்கள். கதர் இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு கதர் ஆடைகளை உடுத்தி காந்தியவாதியாக இராட்டையில் நூல் திரித்து கதர் இயக்கத்திற்கு ஒத்துழைப்பு தந்தார். மேலும் தீண்டாமை ஒழிப்பு, வெள்ளையர் எதிர்ப்பு போன்ற நிகழ்வுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தன் சுதந்திர உணர்வை வெளிப்படுத்தினார். 1937 இல் தீரர் சத்தியமூர்த்திக்காக தானே பிரச்சாரம் செய்தார். அதில் “ஓட்டுடையோரே கேளீர்” என்று தன் வெண்கல குரலால் பாடி வாக்கு சேகரித்தார். மேலும் பல காங்கிரஸ் மேடைகளில் தனியாவர்த்தனம் செய்தார். கூட்டம் முடியும் போது கே.பி.எஸ். அவர்கள் பாடுவார்கள் என்று அறிவித்துவிட்டு தலைவர்கள் பேசும் அளவிற்கு மக்களிடம் பெரும் செல்வாக்கு பெற்று இருந்தார் சுந்தராம்பாள் அவர்கள். “சிறைச்சாலை என்ன செய்யும்” என்று சுந்தராம்பாள் பாடும்போது அனைவரின் மனதிலும் சிறைச்சாலை மீதான பயம் துச்சம் என தவிடு பொடியானது. காந்தியடிகளை பற்றி கே.பி.எஸ். பாடிய பாடல்கள் அந்த காலத்தில் இசைத்தட்டுக்களாக வெளியாகி விற்று தீர்ந்தன. குறிப்பாக “காந்தியோ பரமஏழை சன்னியாசி” என்ற பாடல் மிகவும் பிரசித்தி பெற்றது. மகாத்மா காந்தியை சுந்தராம்பாள் இரண்டு முறை சந்தித்து இருக்கிறார். 1937ல் காந்தி ஈரோடு வட்டாரத்தில் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது சத்தியமூர்த்தியின் ஏற்பாட்டின்படி கொடுமுடியில் உள்ள கே.பி.எஸ். வீட்டில் உணவருந்தினார். மகாத் மாவுக்கு ஒரு தங்கத்தட்டில் உணவு பறிமாறினார் கே.பி.எஸ். “எனக்குச் சாப்பாடு மட்டும்தானா? தட்டு கிடையாதா?” என்று காந்தி சிரித்துக் கொண்டே கேட்க, விருந்து முடிந்ததும் தங்கத்தட்டை காந்தியிடம் வழங்கினார் கே.பி.எஸ். காந்தி அதை அங்கேயே ஏலத்தில் விட்டு, பணத்தை காங்கிரஸ் நிதியில் சேர்த்துவிட்டார். 1958 இல் காமராஜர் ஆட்சியில் சட்டமன்ற மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் கலைஞர் என்று பெருமையை பெற்றார் சுந்தராம்பாள் அவர்கள். சென்னையில் 20 கிரவுண்ட் இடம் வாங்கிய கே.பி.சுந்தராம்பாள், காங்கிரஸ் தலைவர் எஸ், சத்யமூர்த்திக்கு 4 கிரவுண்ட் நிலத்தை அன்பளிப்பாக வழங்கினார்.

கட்சி பாகுபாடின்றி அனைவரா லும் போற்றப்பட்டவர் கே.பி.சுந்தராம் பாள் அவர்கள். அறிஞர் அண்ணா திராவிட நாடு பத்திரிக்கையில் கே பி சுந்தராம்பாள் பற்றி எழுதும் பொழுது “கொடுமுடி கோகிலம்” என்று புகழ்ந்தார்.


காங்கிரஸ் கட்சிக்காக சுந்தராம் பாள் செய்த சேவைகளை பாராட்டி ஜவஹர்லால் நேரு, இந்திராகாந்தி போன்றோரிடம் இருந்து பாராட்டு கடிதம் வந்தது. கலை, இசை, சுதந்திரம், அரசியல் மட்டுமின்றி பக்தியிலும் சிறந்து விளங்கினார். முருகன் மீது அதிதீவிர பக்தி கொண்டிருந்த கே.பி. சுந்தராம்பாள் அவர்கள் பல மேடைகளில் இறை பணிக்காக கச்சேரிகள் செய்தார். குறிப்பாக வடபழனி கோவிலுக்கு நிறைய நன்கொடைகளையும் செய்தார்.

பக்த நந்தனார் (1935), மணிமேகலை (1940), அவ்வையார் (1953), பூம்புகார் (1964), மகாகவி காளிதாஸ் (1966), திருவிளையாடல் (1965), கந்தன் கருணை (1967), உயிர் மேல் ஆசை (1967), துணைவன் (1969), சக்தி லீலை (1972), காரைக்கால் அம்மையார் (1973), திருமலை தெய்வம் (1973), உள்ளிட்ட 12 படங்களில் சுந்தராம்பாள் பாடி நடித்தார். 260 பக்திப் பாடல்கள் பாடியவர். 1970ல்

➤ பக்கம் 8ல் தொடரும்

# பெண் சமத்துவத்திற்கான மைல்கல்...

## காதலிக்க நேரமில்லை





இயக்குநர் கிருத்திகா உதயநிதி

கிருத்திகா உதயநிதி இயக்கத்தில் உருவாகியிருக்கிற ஆழமான காதல் படம். இப்போதும் தமிழகத்தை வழிநடத்திக்கொண்டிருக்கிற பெரியார் குறித்த பாசிச வன்ம பேச்சுகள் மற்றும் அதற்கு விலை போன சொத்தை வித்துகளின் சலசலப்பும் தமிழக மக்களின் இதயங்களில் ரௌத்திரமாய் கனன்று கொண்டிருக்கிற இந்த வேளையில், பெரியாரிய சிந்தனையை கலாப்பூர்வமாக மிகுந்த நுட்பத்தோடு இந்த படைப்பு வெளிக்கொண்டு வந்திருக்கிறது. மிகப்பெரிய விசயத்தை அநாயாசமாக உணர்த்திச் செல்கிறது. பாலின சமத்துவத்திற்கான ஆதார சுருதியை இந்த படைப்பு துல்லியமாக தொட்டிருக்கிறது. இதன் திரைக்கதையாக்கம் அற்புதமானது.

பொதுவாக இரண்டு வகைமைகள் திரைக்கதை உத்திகளில் கையாளப்படும். ஒன்று குற்றத்தை செய்தவர் யார் என்பதை இறுதிக்காட்சி வரை மர்மமாக எடுத்துச் செல்வது. இன்னொன்று அந்த மர்மத்தை முதலிலேயே அவிழ்த்து விட்டுவிட்டு, அதை கதைமாந்தர்கள் எப்போது, எப்படி கண்டுபிடிக்கிறார்கள் என்கிற கோணத்தில் எடுத்துச் செல்வது. ஹிச்காக் இதில் எப்போதும் இந்த இரண்டாவது வகைமை உத்தியையே தன்னுடைய திரைக்கதைகளில் பயன்படுத்துவார். அதாவது அந்த மர்ம முடிச்சை பார்வையாளர்களுக்கு துவக்கத்திலேயே தெரிவித்து விடுவார். இறுதி வரை எப்போது முக்கியமான அந்த கதாபாத்திரங்களுக்கு இது தெரிய வரும் என்கிற கோணத்தில் இதன் திரைக்கதை பயணிக்கும். இங்கே கிருத்திகாவும் அப்படியான உத்தியையே பயன்படுத்தி இருப்பதோடு, அதையும் தாண்டிய மூன்றாவது தளத்திற்கு இதன் கதை சொல்லல் உத்தியை நகர்த்திச் செல்கிறார்.

கல்யாணம் என்கிற நிறுவனமயத்தின் நமைச்சல் ரவி மோகனுக்கு ஒவ்வாததாக இருக்கிறது. உறவு என்பது கமிட்டடாக இருக்ககூடாது. சுதந்திரமானதாக இருக்க வேண்டும் என அவர் நினைக்கிறார். அவர் லிவ் இன் ரிலேசன்ஷிப்பை ஆதரிக்கிறவராகவும், 140 கோடி ஜனத்தொகை இருக்கிற இந்த நாட்டில் உடனடி குழந்தைப்பேறு இப்போதைக்கு தேவையில்லையே என்று நினைக்கிறவராகவும் இருக்கிறார். அதனால் அவரின் காதலி அவரை விட்டு நிரந்தரமாக பிரிந்து செல்கிறார். இந்தப்படம் அற்புதமான அவரின் இரண்டாவது இன்னிங்ஸ். நாயகன் ரவி அந்த கதாபாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார். அத்தனை இயல்பான இப்படியொரு நடிப்பை அவர் இதற்கு முன்வெளிப்படுத்தியிருக்கிறா என்று நமையெல்லாம் யோசிக்க வைக்கிறார்.

இந்தப்பக்கம் கதை நாயகி நித்யா மேனன் உடனடியாக ஒரு குழந்தை பெற்று அந்த தாய்மையை முழுமையாக கொண்டாட வேண்டும் என்கிற தவிப்போடு இருக்கிறார். நேரெதிர் துருவங்களாக அவர்கள் துவக்கத்தில் ஒரு தோற்றப்பிரமையை ஏற்படுத்துகிற வகையிலேயே, இந்தப்படம் பார்க்கிறவர்களை நிமிர்ந்து உட்கார வைத்து விடுகிறது.

இந்த படைப்பு மிகைநாடகத்தனங்களை முற்றாக தவிர்த்து இருக்கிறது. உணர்வே அறமென்கிறது. உணர்வின் உண்மையை நம்பியிருக்கிறது. அதன் வழியிலேயே இந்த யதார்த்தமான பயணத்தை இதன் திரைக்கதை மேற்கொண்டிருக்கிறது.

கிளைக்கதையாக வினயின் தன்பாலின ஈர்ப்பால் உண்டாகிற காதல் சொல்லப்படுகிறது.

காதலிக்க நேரமில்லை என்று சொன்னாலும், படம் நெடுகிலும் ஆழமான, உண்மையான காதலின் சூட்சுமத்தின் வெளிப்பாடே, கவிதையாய் காட்சி வடிவில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. வினய் ‘கே’ வாக இருப்பதால், நண்பர்களான ரவி மற்றும் யோகி பாபு ஆகியோரின் உயிரணுக்களை ஸ்பெர்ம் டொனேட் பண்ண வைத்து பின்பு தனக்கென குழந்தை தேவையென்றால் பயன்படுத்திக்கொள்ளலாம் என்கிற திட்டத்தில் ஸ்பெர்ம் பேங்க் அழைத்துப்போய் அவற்றை சேமித்து வைக்க வைக்கிறார்.

அப்போது அவர்கள் அந்த நர்ஸை விளையாட்டாக கலாய்த்ததின் விளைவாக இடம் மாறிச் செல்கிறது. இதில் யோகிபாபு கதையோடான கதையை, கதாபாத்திரத்தை விட்டு வெளியே போகாதபடி மென்நகைச் சுவைகளை வெளிப்படுத்தியிருப்பது ‘அட’ போட வைக்கிறது.

இதற்கிடையே குழந்தை பெற்றுக்கொள்கிற ஆர்வத்தோடு அதுநாள் வரையான தன்னுடைய காதலனை கரம்பிடிக்க நித்யா போகையில், அவன் அவளின் நெருங்கிய தோழியோடு ஒன் நைட் ஸ்டேன்டில் மிகவும் அந்தரங்கமான நிலையில் இருப்பதை பார்த்து அதிர்கிறாள். அவனை பிரேக் அப் செய்து விட்டு, ஸ்பெர்ம் பேங்கில் போய் யாருடைய ஸ்பெர்ம் என்றே தெரியாத ஒருவரின் உயிரணுக்களை ஏந்தி கன்னியாக இருக்கிறபோதே கர்ப்பம் ஆகிறாள். இதனால் அவளின் அம்மா அவளை எட்டு வருட காலமாக தள்ளி வைத்து விடுகிறாள். அவள் எதற்கும் சளைக்கவில்லை. அம்மா அப்பாவை மதிக்கிறவளாக, பாதுகாக்கிறவளாக இருந்தாலும், அவள் அவளின் சுயமுடிவுகளில் அவர்கள் தலையிடுவதை ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

இருவரும் சிவில் இன்ஜினியரிங் துறையில் இருக்கிறவர்கள். அவள் ஆர்க்கிடெக்ட். இவன் ஸ்ட்ரக்சரல் இன்ஜினியர். துவக்கத்தில் தன் ஏழு வயது மகன் அப்பா பற்றி ஒரு சமயம் கேட்கிறான். இவள் குழந்தைத்தனமாக அவனை சூப்பர் பாய் என்று சொல்லி சமாளிக்கிறாள்.

இந்தச் சூழலில் ஒரு முறை அவள் பெங்களூருவிற்கு ஒரு விசயமாக வந்தவள், தனக்கு ஸ்பெர்ம் டொனேட் செய்தவனை கண்டுபிடிக்க நினைக்கிறாள். அவன் பெயர் மாற்றித் தந்திருப்பதால், அந்த முயற்சியை அப்போதே உதறி விடுகிறாள். ஆனால், அப்போது தான் ரவியை அங்கே தற்செயலாக சந்தித்து நட்பு கொள்கிறாள். ரவி அவளை பார்த்த அந்த கணமே முதன்முதலாக முழுமையான காதலை உணர்கிறான். அவனின் உயிரணுவை கொண்டு தான் அவள் கர்ப்பமாகி இருக்கிறாள் என்பது அப்போது அவளுக்கு தெரிந்திருக்காது. இயற்கை அவர்களை தானாக அருகருகே கொண்டு வந்து இந்த திரைக்கதையில் ஒரு ஆழமான, சுவாரஸ்யமான விளையாட்டை நிகழ்த்திக் காட்டுகிறது. அப்படி சந்திக்கையில் கால்பந்தில் அதிக ஆர்வம் காட்டும் பார்த்தீவ் என்கிற அந்த சிறுவனுக்கு ரவி கற்றுத் தருவதும், ரவியின் அப்பா வால் உட்பட அவர்களின் பரம்பரையே கால்பந்து விளையாடுவதில் மிகுந்த தேர்ச்சியும், நாட்டமும் கொண்டவர்கள் என்பது காட்சியாக வெளிப்படுகிற இடம் உயிர்ப்பானது. பல விசயங்களை இந்த படம் பூடகமாக சொல்லாமல் உணர்வுகள் வழி சொல்லிச் செல்கிறது. அதற்குப் பக்கபலமாக ஏ.ஆர். ரஹ்மானும், கேமராமேனும் முழுஈடுபாட்டோடு செயல்பட்டு, இந்த அனுபவத்தை முற்றிலும் புதியதானவொரு அனுபவமாக மாற்றித் தந்திருக்கிறார்கள்.

யோகிபாபு தற்செயலாக உச்சக்கட்டகாட்சியில், நித்யாவின் மகன் ரவியின் உயிரணுவின் மூலம் ஜனித்தவன் என்பது தெரியாமலே அந்த தகவலை பார்வையாளர்களுக்கு கடத்துகிற இடத்தில், அதை தெரிந்து கொள்கிற ஆர்வமற்று ரவியும், நித்யாவும் அது குறித்து தெரிந்து கொள்கிற எந்தவித ஆர்வமுமற்று, அவசியமுமற்று அதைத் தாண்டிச் செல்கிற இடத்தில் இது உலக சினிமாவாக பரிமளித்து விடுகிறது. புதிய உயிர்ப்பான உத்தி.

நாயகன், நாயகி இருவருக்கிடையே உண்டாகிற நட்பு, எப்படி காதலாகிறது என்று பயணிக்கிற

இதமான திரைக்கதை, முடிவில் அவள் பெற்றிருக்கிற உயிரணுக்கள் ரவியினுடையது என்று தெரிகிற தருணம் தானே அதில் உச்சக்கட்ட காட்சியாக இருக்க முடியும் என்று அனைவரும் நினைத்திருந்திருப்பார்கள். அதுவே பொதுவான பார்வையாக இருக்கக்கூடும். அந்த ஃபார்முலாவை ஓரந்தள்ளி விட்டு இந்த திரைக்கதை முற்றிலும் புதிய ஆக்கப்பூர்வமான கோணத்தில் பயணித்து, அற்புதமான சிந்தனை தளத்திற்குள் நம்மை ஆழ்த்தி விடுகிறது.

அவர்கள் அந்த உண்மையை கடைசிவரை அறிந்து கொள்வதில்லை. அறியவேண்டிய தேவையும் இல்லை என்கிற அந்த பார்வையின் ஒத்திசைவான தரிசனமே இங்கே காதலின் உண்மையான சூட்சுமம் என்பதை இந்த படைப்பு அந்த பாதையில் அநாயாசமாக உணர்த்திச் செல்கிறது.

பாலின சமத்துவமும், பெண் சுதந்திரமுமே ஒரு மகிழ்ச்சியான சமுதாயத்திற்கான ஆதார தேவை. அதை மையக்கதாபாத்திரங்கள் அற்புதமாக வெளிப்படுத்தி இருக்கின்றன. யதார்த்தமாக இருக்கிற அதே வேளையில் விறுவிறுப்பாகவும் இந்த திரைக்கதை நகர்கிறதை அவதானிக்கிறபோது, மனதில் ஒரு சிலிர்ப்பு. அந்தப்புள்ளியில் தான் இது உலகத்தரமான படைப்பு என்கிற அங்கீகாரத்தை சூடிக்கொள்கிறது. அத்தனைக்கும் மூலகாரணியாக இருந்து ஆர்ப்பாட்டமில்லாமல், அமைதியான நதிப்பிரவாகத்தின் பயணிப்பாய் இந்த அரிய படைப்பை நுட்பமாக செதுக்கி, நம் பார்வைக்கு தந்திருக்கிறார் கிருத்திகா.

இந்த படைப்பை மேலும் மேம்பாடு கொள்ள வைக்கிற வகையில் சில விசயங்கள் கூடுதலாக செய்திருக்கலாம் என்று தோன்றுகிற இரண்டு இடங்கள் பற்றி இங்கே சொல்லாம் என்று தோன்றுகிறது.

முதல் பார்வையிலேயே ரவிக்கு நித்யா மீது காதல் வந்து விடுகிறது. அதை ஒரு பெண் மனது நிச்சயமாக கண்டுணர்ந்து ஆழ்மனதில் அடிக்கோடிட்டிருக்கும் தான். அந்த அரூப புரிதல் தான், அவர்களை மறுபடிமறுபடி யதார்த்தமான சூழல் வழி சந்திக்க வைத்து, அந்த காதலை வளர்த்தெடுக்கிறது. அப்படி இருக்கையில் தொழில்முறையில் அவர்கள் இருவரில் ஒருவருக்கு அந்த மிகப்பெரிய புராஜெக்ட் கிடைப்பதில் ஒரு ஆராக்கியமான முனைப்பு நிகழ்கையில், அவனை நன்றாக புரிந்து வைத்திருக்கிற, காதலை நுட்பமாக புரிந்து வைத்திருக்கிற நித்யா அந்த ஒற்றை கணத்தில் காணுகிற ஒற்றை காட்சியை மூலமாக ரவியை தவறாக புரிந்து கொண்டு கோபிப்பது அவர்களின் புரிதலுள்ள காதலுக்கு அழகல்ல.. தேவையற்றது. அந்த காட்சியை நீக்கி இருக்கலாம். நித்யாவின் பாஸ், நம்முடைய போட்டி நிறுவனம் இந்த புராஜெக்டிலிருந்து




தானாகவே விலகிக்கொண்டு விட்டது என்பதை தெரிவிக்கிற காட்சி மட்டுமே போதுமானது. அதன் வாயிலாகவே நித்யாவிற்கு அதை தன் காதலுக்குரியவன் தனக்காக விரும்பியே விட்டுக்கொடுத்திருக்கிறான் என்பது புரிந்து விடுகிறது தானே.

இரண்டாவதாக நாயகனின் நண்பன் வினய் கொண்டிருக்கிற கே உறவு. இங்கே இது குறித்த புரிதல் பரவலாக போய்ச் சேராத சூழல் தானே இன்னும் இங்கே நிலவுகிறது. அதனால் அவர்கள் இடையேயான ஆழமான அன்பின் பரிமாற்றத்தை உணர்த்தும் விதத்தில் ஒரு காட்சி வைத்து இருக்கலாம்.

பெரியார் பெண் விடுதலைக்காக சொன்ன புரட்சிகரமான கருத்துகளை, சிந்தனைகளை இந்த படைப்பு கலை வடிவில் துளியும் பிரச்சாரத்தனமின்றி காட்சிப்படுத்தி யிருக்கிறது. பெண் விடுதலை என்பது மானுட விடுதலையின் அடித்தளம். ஒரு மகிழ்ச்சியான சமுதாயம் பரிமளிப்பதற்கான தவிர்க்க முடியாத தேவை.

மகிழ்ச்சியான தாய் வழிச் சமுதாயத்தில் ஒவ்வொரு குழுவிலும் பெண்ணே தலைமை ஏற்று இருந்திருக்கிறாள். அங்கே அனைத்து குழந்தை களுக்கும் அம்மா மட்டுமே உண்டு. அப்பா என்று எவரும் இருந்ததில்லை. அதற்கான அவசியமும் ஏற்பட்டிருக்கவில்லை. விவசாயம் கண்டுபிடிக்கப்பட்டு, அங்கே தந்தை வழிச் சமூகம் என்கிற ஆணாதிக்க சமுதாயம் தோற்றுவிக்கப்பட்ட பிற்பாடு தான் பெண் தன்னுடைய பாலுறுப்புளை அடையாளப் படுத்தியே அடிமைப் படுத்தப்பட்டி ருக்கிறாள். தன் மனது மட்டுமல்ல, தன் உடம்பும் அவளுக்கு சொந்தமில்லை என்கிற கட்டமைவு அங்கிருந்து தான் கட்டியெழுப்பப் பட்டிருக்கிறது.

முன்னாள் ரஷ்ய அதிபர் செர்னன்கோ "பழைய மரபுகளை சிதைப்பதே கலை இலக்கியத்தின் இலக்கு. அப்படிச் செய்கிறபோது அந்த மக்களே தங்களுக்கான புதிய மரபுகளை உருவாக்கிக்கொள்வார்கள்" என்றார்.

மாறுதல் என்பது மாறாதவிதி. அதுவே ஆக்கப்பூர்வமான வளர்ச்சி. பெண் அடிமைத்தனத்தின் மைய வேராக இருக்கிற உடல் சார்ந்த கற்பு என்கிற கற்பிதத்தை எந்தவித பிரச்சாரத் தொனியும் இல்லாமல், காட்சிகளின் வெளிப்பாட்டி னூடாகவே இந்த படைப்பு துவம்சம் செய்திருக்கிறது. இந்தப் படைப்பு பெண் சமத்துவத்திற்கான மைல்கல். காதலின் சூட்சுமம். இது ஒரு மௌனப்புரட்சி.

இயக்குநர் குலசேகர்
9941284380

திரை மொழி

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
கௌரவ ஆசிரியர்கள் : குரு ரங்கதுரை,
ISR செல்வகுமார்
பாலமுரளிவர்மன்
உதவி ஆசிரியர்கள் : ஸ்ரீராம் பத்மநாபன்,
V. கார்த்தி குமார்

தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766



# நூறு கோடி வசூலை தாண்டி - மேக்ஸ்




விஜய் கார்த்திகேயா இயக்கத்தில் வெளிவந்திருக்கிற மேக்ஸ் திரைப்படம் எதிர்பார்த்திராத இன்ப அதிர்ச்சி. இப்படியொரு விறுவிறுப்பான திரைப்படம் இதுவரை வந்திருக்கிறதா தெரியவில்லை. கன்னடம், தமிழ் என இரண்டு மொழிகளில் கிச்சா சுதீப் நாயகனாக நடிக்க வெளி வந்திருக்கிற படம். கன்னடத்தில் நூறு கோடி வசூலை தாண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. இதன் தயாரிப்பாளர் கலைப்புலி எஸ். தாணு.

இத்தனை விறுவிறுப்பாக ஒரு திரைக்கதை அமைப்பதென்பது அசாத்தியமானது. அதை அநாயாசமாக விஜய் கார்த்திகேயா சாதித்துக்காட்டி இருக்கிறார். இவர் பார்த்திபன், பேரரசு, பாண்டியன் முதலான இயக்குநர்களின் பட்டறையில் இயக்குநருக்கான பயிற்சி எடுத்தவர்.

கதை தற்செயலான ஒரு விபத்தில் துவங்குகிறது. அந்த தற்செயலான விபத்து ஒரு மிகப்பெரிய சமூக நீதிக்கான, பெண்ணியத்திற்கான, அறத்திற்கான போராட்டமாக உருவெடுத்து, காட்சிப்பூர்வமாக பார்க்கிற அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தபோகிறதென்பது அப்போது தெரியாது. அபூர்வமான விசயங்கள் இப்படியாக தற்செயலான தருணங்களில் இருந்து தான் துளிர்க்கின்றன.

அப்படியாகவே இந்த படைப்பு கிளர்ந்தெழுகிறது. இது ஒரு இரவில் நடக்கிற சம்பவங்களின் தொகுப்பு. அந்த தற்செயலான விபத்தில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் அமைச்சருக்கு நெருக்கமானவர்கள். அதனால் விசாரிக்க ஓடி வந்த காவல்துறையினரை தாக்க, அப்போது தான் டியூட்டியில் சேர வந்திருக்கும் இன்ஸ்பெக்டர் சுதீபா அவர்கள் இரண்டு பேரையும் பந்தாடி, லாக்கப்பில் அடைத்து, எஃப்.ஐ.ஆர் போடச் சொல்கிறார்.

நாயகன் சுதீபா கதாபாத்திரம் அற்புதம். அவர் எதற்கும் அடிபணியாதவர். அஞ்சாதவர். எந்தவித அநீதியாக இருந்தாலும் அநாயாசமாக எதிர்கொள்பவர். அதனால் இவர் அடிக்கடி தற்காலிக பணிநீக்கத்திற்கு உள்ளாகிறவர். அதுபற்றி துளியும் கவலை கொள்ளாமல் தனக்குச் சரியென படுகிற விசயத்திற்காக துணிந்து நின்று, வருகிற பிரச்னைகளை எதிர் கொள்கிறவர்.

படத்தில் வரலட்சுமி சரத்குமார் மற்றும் இளவரசு நடித்திருக்கிற கதாபாத்திரங்கள் சிறப்பாக எழுதப்பட்டிருக்கிறது. இளவரசுவின் கதாபாத்திரம் யாருமே யூகிக்க முடியாத அளவிற்கு வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

முதல் பாதி என்று பார்த்தால், லாக்கப்பில் அடைக்கப்பட்ட பெரிய இடத்து ஆசாமிகள் இரண்டு பேரும் கருத்து வேறுபாட்டால் காண்டாகி ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்கிறார்கள். அந்த நேரம் பார்த்து கான்ஸ்டபிள் இளவரசு தன்னுடைய மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் அவசர மாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அறிந்து, காவல் நிலையத்தை சாவி போட்டு பூட்டிவிட்டு அவரை பார்க்க மருத்துவமனை விரைகிறார். பிற்பாடு வந்து பார்த்தால் அந்த இரண்டு பேரும் அடித்துக்கொண்டு இறந்து விடுகிறார்கள். உடனே நேர்மையான இளவரசு மறுபடி பொறுப்பை எடுக்க இருக்கிற இன்ஸ்பெக்டர் உதவியை நாடுகிறார். காரணம் அரசியல்வாதியின் அடியாட்கள், அரசியல்வாதிக்கு நெருக்கமான கிரைம் இன்ஸ்பெக்டர் வரலட்சுமி, மினிஸ்டர் ஆட்கள் என மும்முனை தாக்குதல் அதற்குள் ஆரம்பித்து விடுகிறது. கிளைமாக்சில் துவங்கி, கிளைமாக்சில் நிறைவடைகிறது இந்த படைப்பு.

ஒரு விறுவிறுப்பான ஆக்சன் திரில்லர் என நினைத்துக்கொண்டிருக்கையில், இடைவேளைக்கு பின் அதே திரில்லர் சமூக அக்கறையோடான படைப்பாக திருப்பம் கொள்கிறது. அந்த திருப்பத்தை யாருமே எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அப்படியொரு பரவசமான திருப்பம் அது. அனைவரையும் இருக்கையின் நுனிக்கு அழைத்துக் கொண்டு வந்து விடுகிற திருப்பம் அது.

நாயகன் ஒரு அசகாய சூரன் என்றாகிறபோது அடுத்தடுத்த காட்சிகளில் வில்லன்கள் டம்மியாக்கப்பட்டு விடுவதே வழக்கம். ஆனால், இந்த திரைக்கதையில் வில்லன்கள் அடுத்தடுத்த இலக்கை நிர்ணயித்துக் கொண்டே போவதும், அவற்றை நாயகன் மற்றும் அவரின் குழு புத்தி சாலித்தனமாக சற்றும் எதிர்பார்த்திராத முற்றிலும் புதிய கோணத்தில் முறியடித்துக்கொண்டே செல்வதுமென திரைக்கதை றெக்கை கட்டி பறக்கிறது.

இளவரசுவின் மனைவி ஒரு கட்டத்தில் காவல் நிலையத்திற்கு அவரை பார்க்க வந்து விடுகிறார். உடனே நாயகனுக்கு எதற்காக இளவரசு பொய் சொன்னார் என்கிற சந்தேகம் வர, நடந்த உண்மை அத்தனையையும் ஒன்று விடாமல் இளவரசு சொல்ல ஆரம்பிக்க, திரைக்கதை அடுத்த கட்டத்திற்கு தாவுகிறது.

இந்த இரண்டு பேரையும் கொன்றது இளவரசு தான். காரணம் அவர்கள் ஒரு பதின்பருவ சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து விபத்துக்குள்ளான அவர்களின் கார் டிக்கியில் நிர்வாணமாக வாய்பொத்தி அடைத்து வைத்திருந்திருக்கிறார்கள். அதை கண்டுபிடிக்கும் இளவரசு அந்த பெண்ணை அரசு மருத்துவமனைக்கு தக்க பாதுகாப்புடன் அனுப்பி வைத்து விட்டு, இந்த இரண்டு பேரையும் போட்டுத்தள்ளுகிறார். ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு இறந்து போனதாக சொல்லி சமாளித்தது தன்னுடைய மனைவிக்காக தான் என்கிறார்.

இன்று இளவரசுவிற்கு கடைசி நாள் பணி. நாளையிலிருந்து அவர் சொந்த கிராமத்திற்கு போய் மனைவியோடு நிம்மதியாக வாழப் போவதாக நினைத்திருந்திருக்கிறார். அவரின் மனைவியின் கனவு அது. இதுநாள் வரை அவரின் விருப்பத்தை ஒரு போலீஸ் காரனாய் நிறைவேற்றித்தர முடியாத நிலையில் இருந்த இளவரசு, இந்த விருப்பத்தை யாவது நிறைவேற்ற லாம் என தயாராக இருந்த கணத்தில் இப்படியொரு அதிரடி திருப்பம்.

அவர் எளியவர் தான். ஆனால், அநீதிக்கு எதிராக துணிந்து நிற்க தவறவில்லை. அதனாலேயே இத்தனை சம்பவங்கள் நிகழ்ந்து விட்டிருக்கின்றன. அத்தனையும் அவதானிக்கிற நாயகன் சுதீபா, தானும் இளவரசுவை போல நியாயத்திற்காக யாராக இருந்தாலும் எதிர்த்து போராடுகிறவன் என்கிற வகையில் இனியும் தொடர்ந்து போராடி இளவரசுவின் அர்ப்பணிப்பை மதித்து, அவரை காப்பாற்றித் தீருவது என தீர்மானிக்கிறார். அதை எப்படி சாத்தியப்படுத்தி காட்டுகிறார் என்பது தான் மீதி திரைக்கதை

ஒரு விறுவிறுப்பான ஜனரஞ்சகமான திரைப்படம் என்று தோன்றுகிற வேளையில் இன்னு மின்னும் வேகமெடுத்துச் செல்வதோடு, சமூக அக்கறையுள்ள, நியாயத்தை நிலைநிறுத்த போராடும் ஒரு எளிய மனிதனுக்கு பக்கபலமாக நிற்கிற நாயகன் என கதை பெண் உரிமை குறித்த பார்வையில் மையம் கொள்கிறது. ஒரு பரபரப்பான திரைப் படம் அந்தப்புள்ளியில், அதையும் தாண்டிய கலாப்பூர்வமான திரைப் படைப்பாக பரிணாமம் கொண்டு விடுகிறது.

விஜய் கார்த்திகேயா இந்த படத்தை எழுதி, இயக்கியிருப்பதோடு, அத்தனை பாடல்களையும் அவரே எழுதி இருக்கிறார். பாடல்கள் உயிர்ப் போடும், கச்சிதமான சந்தத்தோடும் அமைந்திருப்பது ஆச்சர்யம்.

பார்க்கிறவர்கள் ஒன்று நினைத்தால் அதை தாண்டியதாக அடுத்த காட்சி வருகிறது. அந்த அளவிலான காட்சியாக அடுத்த காட்சியை எதிர்பார்க்கிறபோது அதையும் தாண்டிய காட்சியாக அதற்கடுத்த காட்சி வந்து ஆச்சர்யப்பட வைக்கிறது. இப்படியான ஆச்சர்யங்கள் வழிநெடுகிலும் கொட்டிக்கிடக்கின்றன. படம் துவங்கி நிறைவடைகிறது வரை இந்த அமர்க்களங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.


இயக்குநர்
விஜய் கார்த்திகேயா

உதாரணத்திற்கு சொல்வதென்றால் கிங்ஸ்லி, நாயகனும் இளவரசும் காரில் சென்று கொண்டிருக்கையில் பின்னால் ஒளிந்து கொண்டு அவர்கள் செல்கிற வழியை செல்ஃபோன் வழியாக அனுப்பிக் கொண்டு இருப்பார். உடனே பார்வையாளர்கள் மனதில் பதற்றம் தொற்றிக்கொள்ளும். அந்த நேரத்தில் நாயகன் அந்த தந்திரத்தை கண்டு பிடித்து, வேண்டுமென்றே தப்பான பிளான் இளவரசிடம் கொடுக்க, அதை கிங்ஸ்லி வில்லனுக்கு தெரிவிக்க, நாயகன் அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி தான் நினைத்ததை நினைத்தபடி செய்து விடுகிற இடம். இப்படி படம் நெடுகிலும் இரண்டு பக்கமும் புத்திசாலித்தனமான நகர்த்தல்கள் இடம் பெற்றுக் கொண்டேயிருக்கும்.

இயக்குநர் விஜய் கார்த்திகேயா இந்த ஒரு படைப்பின் மூலம், இந்திய திரைவரலாற்றின் வரிசையில் தவிர்க்க முடியாதவொரு இயக்குநராக தன்னை முன்னிறுத்தியிருக்கிறார். ஒவ்வொரு காட்சியிலும், காட்சித்துளிகளிலும் அவரின் அபாரமான உழைப்பு தெரிகிறது. படம் பார்த்து விட்டு வந்த பிற்பாடும் கூட அது தந்த பிரமிப்பு அத்தனை சுலபத்தில் அடங்கவில்லை. மனதிற்குள் அந்த பரவசம் நின்று விளையாடுகிறது.

**இயக்குநர் குலசேகர்**

திரை மொழி TALKIES
Thiraimozhi Talkies

# ஏ.ஐ. கற்க அடிப்படை கருவிகள்

முதல் முறையாக அவசர சிகிச்சைப் பிரிவில் நுழைந்தேன். எந்தவித ஆர்ப் பாட்டமும், பதற்றமும் இல்லாமல் மிக நிதானமாக, ரேப்பிடோ ஆட்டோ தம்பிக்கு "மேல இருபது ரூபாய்" கொடுத்தபின் எனது மருத்துவமனை பிரவேசம் நிகழ்ந்தது.

"அஞ்சாம் நம்பர் பெட் கொடுத்துடுங்க".

சில்லென்ற ஹால். நான்கு படுக்கைளில் இரண்டில் ஆளில்லை. ஒன்றில் நான், மற்றொன்றில் ஒரு பெரியவர் படுக்கையில் அனத்திக் கொண்டிருந்தார்.

மருத்துவரின் ஃபோன் வழி அறிவுறுத்தலின்படி, பழைய ரிப்போர்டுகள் படித்துப் பார்க்கப்பட்டு என் சிகிச்சை துவங்கியது.

"அசையாதீங்க! இடுப்புல இன்ஜெக்ஷன் போடணும்."

"போடுங்க"

"போட்டாச்சு"

"அதுக்குள்ளயா !!!"


சிஸ்டர் சிரித்துக்கொண்டே, பெரியவருக்கு நகர்ந்துவிட்டார். அழகி! எனக்கு அறுபது, அழகிக்கு முப்பத்தைந்து இருக்கலாம்! அடுத்தடுத்த படுக்கைகளை சிக்கன் குனியா இருமலுடன் வந்த நபரும், நாய்க்கடியுடன் வந்த யுவதியும் ஆக்கிரமித்தார்கள். எனக்கு சிக்கன் குனியா முன் அனுபவம் இருந்ததால் முகக் கவசம் அணிந்து கொண்டு ஜாக்கிரதையாகப் பேச்சு கொடுத்தேன்.

அழகி தடை போட்டார். பேசாதீங்க என்ற மெல்லிய அதட்டலுடன், மார்பு மற்றும் கைகளில் சில்லென்று ஜெல்லை தடவி, பச்சக் என்று எலக்ட்ராடுகளை ஒட்டினார். சில பல நிமிடங்களுக்குப் பின், இ.சி.ஜி இணைப்புகளை துண்டித்துவிட்டு டிஷ்யூவால் ஜெல்லை துடைத்து விட்டுக் கொண்டே "இன்னும் கொஞ்ச நேரத்துல ரிப்போர்ட் வந்துடும்" என்றார். அதற்குள் பெரியவரை சாதா வார்டுக்கு அனுப்பிவிட்டார்கள். சிக்கன்குனியா இருமல்காரர், எனக்கு அட்மிஷன் போடாதீங்க, நான் வீட்டுலயே டிரிப்ஸ் ஏத்திக்கறேன் என்றார். ஊசியுடன் வந்த நர்ஸ், நாய்க்கடி யுவதியின் கை, கால்களில் சிராய்ப்பு இருப்பதையும், இரத்தம் வடிவதையும் கவனித்துவிட்டு, இதை ஏன் முதலிலேயே காண்பிக்கல. இதுக்கு டெட்டானஸ் போடணுமே, என்று சொல்ல, யுவதி கோபித்துக் கொண்டு வெளியேறினார். போகும் போது நானும் டாக்டர்தான், எனக்கே அட்வைஸா என்று சொல்லிக் கொண்டே சென்றார்.

நான் அழகியையே நோட்டம் விட்டுக் கொண்டிருந்தேன். "தூங்குடி செல்லம்" என்று அவள் ஃபோனில் தன் குழந்தையைதாலாட்டிக்கொண்டிருந்தாள். அந்தக் காட்சி அப்படியே ஓவியமாக என் மனதில் பதிந்துவிட்டது. அந்தக் காட்சியைப் போல் ஒரு இமேஜை ஏ.ஐ. வழியாக எளிதாக உருவாக்கிவிடலாம். ஆனால் அதே பெண்ணுடன் அதே காட்சியை வெவ்வேறு காமிரா கோணத்தில் உருவாக்குவது சிரமம். *Midjourney*, *Flux*, *Idogram*, *leonardo* போன்றவை தற்போது அட்டகாசமான படங்களை உருவாக்குகின்றன. ஆனால் ஒரே காட்சியை வெவ்வேறு கோணத்தில் உருவாக்கும் வசதி, இதுவரை அவற்றில் இல்லை.

ஆனால் *minT* என்கிற ஏ.ஐ. இந்த வசதியுடன் வந்திருக்கிறது. ஏஐ திரைப்படங்கள், ஏ.ஐ. அனிமேஷன் படங்கள் உருவாக்குவோருக்கு இது நல்ல சேதி. நான் மருத்துவமனைக்கு செல்ல நேர்ந்துவிட்டதால் இன்னும் முழுமையாக பரிசோதிக்கவில்லை. *https://mintvideo.github.io/* க்குச் சென்று பயன்படுத்திப் பாருங்கள். அதில் நான் குறிப்பிட்ட அழகி மொபைலில் குழந்தையைக் கொஞ்சும் படத்தை பல்வேறு கோணங்களில் உருவாக்கி என்னுடன் பகிருங்கள். அவற்றை அழகிக்கு பரிசாகக் கொடுக்கிறேன். என்னை எக்ஸ் தளத்தில் *https://x.com/ISRselvakumar* என்ற முகவரியில் பிடிக்கலாம்.

365 நாட்களும், 24 மணி நேரமும் யு டியூப் சேனல்கள் இயங்குகின்றன. எந்த வினாடியிலும் புதிதாக ஒரு கன்டென்ட் உள்ளே வந்து விழுகிறது. ஆனால் பெரும்பாலும் குப்பை. யாராவது, யாரையாவது திட்டுகிறார்கள். அல்லது திட்டியதாக திரிக்கப்பட்ட ரீல்கள், ஷார்ட்கள் குவிகின்றன. வெகு அபூர்வமாக நல்ல நிகழ்ச்சிகள் தென்படுகின்றன. அதில் ஏ.ஆர். இரகுமான் சமீபத்தில் கோபிநாத்துக்கு கொடுத்த பேட்டி சிறப்பானது. அந்த பேட்டியில் ஏ.ஐ. பற்றி இரகுமான் பேசியதைக் கவனித்தீர்களா? இளைஞர்கள் மிட்ஜர்னி கற்றுக் கொண்டு, நமது ஊரை புதிதாக கற்பனை செய்து பார்க்கலாம். அதன் மூலம் நமது ஊரை இன்னும் அழகாக, இன்னும் வசதி வாய்ப்புகள் உள்ளதாக, பாதுகாப்பானதாக எப்படி மாற்றலாம் என்று யோசியுங்கள் என்று அறிவுறுத்தி யிருந்தார். நானும் அதை வலியுறுத்து கிறேன். ஏ.ஐ வைத்துக் கொண்டு கச்சா முச்சாவென்று படங்களை உருவாக்காமல், முதலில் ஒரு கான்செப்டை யோசிக்க வேண்டும். இரகுமான் சொன்னது போல சென்னையை மனதில் வைத்து யோசிக்கலாம். சென்னையின் நீர்வழித் தடங்களும், மழை நீர் வடிகாலும் 2050ல் எப்படி இருக்க வேண்டும் என்று வரைந்து பார்க்கலாம். அதன் மூலம் வருடம் தோறும் அச்சுறுத்தும் வெள்ள அபாயத்தை குறைக்க வழி இருக்கிறதா என்பதை வல்லுனர்களுடன் சேர்ந்து உருவாக்கலாம். அந்தப் படங்களை *Run way*, *Sora*, *Haiper*, *hailuoai*, *Hedra ai* போன்றவற்றை பயன்படுத்தி வீடியோவாக மாற்றி டாகுமெண்டரி தயாரிக்கலாம். இவற்றில் தற்போது *Extend* வசதிகள் வந்துவிட்டன. அதாவது ஒரு பத்து வினாடி வீடியோ வின் (*Last Frame*) கடைசி பிரேமைக் கொடுத்தால் அதிலிருந்து புதிதாக ஒரு காட்சியை உருவாக்கி நீட்டிக் கொள்ளலாம். இந்த வீடியோ ஏ.ஐ வரிசையில் *Google Veo* 2 புதிய வரவு. ஆனால் கூகுள் லேப் இன்னமும் இந்தியாவிற்கு இதனை அறிமுகம் செய்யவில்லை. *https://labs.google/* என்ற தளத்துக்குள் சென்று உங்கள் இமெயில் கொடுத்து பதிவு செய்து கொள்ளுங்கள். அதற்குள் அட்டகாச மான பல ஏ.ஐ செயலிகள் உள்ளன.



சார், ஏகப்பட்ட ஏ.ஐ. செயலிகள் தென்படுகின்றன. அவற்றை ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை என்று தடுமாறுவோருக்கு ஒரு யோசனை. குறிப்பாக சினிமா, தொலைக்காட்சி, கிராஃபிக்ஸ், அனிமேஷன் அன்பர்களுக்கு இந்த யோசனை உதவும்.

ஆயிரக் கணக்கில் ஏ.ஐ செயலிகள் இருந்தாலும் அவற்றை பின் வரும் 5 பிரிவுகளில் அடக்கிவிடலாம்.

*Text to Image*
*Image to Image*
*Text to Video*
*Image to Video*
*Video to Video*

2D, 3D என்பவை இவற்றின் உட்பிரிவுகள் என்பதால், எந்தக் குழப்பமும் இல்லாமல் தெளிவாக குறித்து வையுங்கள். தினம் ஒரு ஏ.ஐ வருவதால் பதற்றமடைந்து அதனையும் பயன்படுத்த முயலாதீர்கள். பரிச்சயமான ஏதாவது ஓரிரண்டு ஏ.ஐகளை முழுமையாக பயன்படுத்தி, காமிக்ஸ் புத்தகம், அனிமேஷன் படம், டாகுமெண்டரி, குறும்படம் என உருவாக்கிப் பாருங்கள். இவை எல்லாவற்றிற்கும் அடிப்படை *Text to Image*. எனவே இதிலிருந்து துவங்குங் கள். *Discord* என்றொரு தளம் இருக்கிறது. இது ஏ.ஐ பயன்படுத்துபவர் களுக்கான தளம். இதில் பதிவு செய்து கொண்டு, புதுப்புது ஏ.ஐ கிரியேட்டர் களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள். அவர்கள் வழியாக உங்கள் ஏ.ஐ அறிவை மேம்படுத்திக்கொள்ளுங்கள்.

*Hailuo* தனது அடுத்த மாடலை இறக்கிவிட்டிருக்கிறார்கள். *Hailuo I2V01 Live* என்று இதற்குப் பெயர். நீங்கள் 2Dயில் உருவாக்கும் கேரக்டர்களை இந்த மாடல்களைப் பயன்படுத்தி பேச வைக்கலாம், உருக்கமாக நடிக்க வைக்கலாம், அட்டகாசமாக இழு இழு இழுவென்று நடனமாட வைக்கலாம். வீடியோ கேம் உருவாக்கு வோர், அனிமேஷன் செய்வோர், டிஜிட்டல் ஆர்ட் செய்வோர் இந்த மாடலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

என்னிடம் மறக்காமல் கேட்கப் படும் கேள்வி? உங்களுடைய ஏ.ஐ திரைப்படம் எப்போது வெளியில் வரும்? விரைவில் வரும் என்பது ஒரு வரி பதில். ஏற்கனவே உருவாக்கிய 40 நிமிட படத்தை ஓரம் கட்டிவிட்டு புதிதாக உருவாக்கிக் கொண்டிருக் கிறேன் என்பது பல வரி பதில். இதற்கு ஒரே காரணம் தான். 6 மாதங்களாக உருவாக்கிய இந்த 40 நிமிடப் படத்தை தற்போதைய ஏ.ஐ வீடியோ தரத்துடன் ஒப்பிட்டால் குழந்தையின் கிறுக்கல் போல இருக்கிறது. தற்போது ஏ.ஐ செயலிகள் முன்பை விட அட்டகாசமாக ஆடியோ, வீடியோ மற்றும் படங்களை உருவாக்குகின்றன. எனவே என்னுடைய ஏ.ஐ படம் மீண்டும் முதல் காட்சியிலிருந்து உருவாகிக் கொண்டிருக்கிறது.

ஏ.ஐ சினிமா தொடர்பாக தெளிவு பெற விரும்புவோர் *selvakumar@isrventures.in* என்ற மின்னஞ்சலில் என்னை தொடர்பு கொள்ளலாம்.

சார், உடம்பு சரியில்லன்னு முதல் பாராவில் சொல்லியிருக்கீங்க. ஆனா உடம்புக்கு என்ன என்று சொல்லவே இல்லையே, என்போருக்கு என் அறிவுறுத்தல். உடல் நிலை முக்கியம். அதை விட ஆரோக்கியமான, தைரிய மான மனநிலை முக்கியம். மருத்துவமனை செல்ல நேர்ந்தால் இவ்விரண்டுடன், மெடிகிளைம் பாலிசி முக்கியம். கவனமாக இருங்கள். செயற்கை நுண்ணறிவை விட இயற்கையான உடல் நலம் மற்றும் மன நலம் முக்கியம்.

புத்தாண்டு வாழ்த்துகள்! இந்தப் புத்தாண்டில் கமல் ஏ.ஐ கற்றுக் கொண்டு அதை பயன்படுத்தி படம் எடுப்பார். அதைத் தொடர்ந்து ஏ.ஐ சினிமா வெகு வேகமாக பரவலாகும். நீங்களும் ஏ.ஐ சினிமாவை உருவாக்க, ஏ.ஐ கற்றுக் கொண்டு உங்களை தயார் படுத்திக் கொள்ளுங்கள்.

**ISR செல்வகுமார்** ஏ.ஐ நிபுணர்,
திரைப்பட இயக்குநர்

# பாலா என் "HERO"

**1-ம் பக்கத் தொடர்ச்சி**

டாஸ்மாக் கடைகளின் உரிமங்களை ரத்து செய்யவும் போராடுகிறார். குறிப்பாக அந்த 'பஞ்சாபி' மொழி மாவட்ட ஆட்சியரை அவரது தாய்மொழி பேசி சிக்கலை புரியவைக்கும் போது "மொழி வெறும் கருவி தான்" என்கிற உருட்டுகளை ஓங்கி அடித்து ஓரத்தில் உட்கார வைக்கிறார் பாலா.

அதன்பிறகுதான் கதை மெல்ல விரிகிறது. 'கோட்டி'யின் (அருண் விஜய்) கட்டுக்கடங்காத கோபத்திற்கு கால்கட்டு போடும் வகையில் 'கைகட்டி வேலை செய் கோட்டி' என்று ஆதரவற்றோர் இல்லத்தில் பணிக்கு சேர்க்கப் படுகிறார். ஆனால் அவர்தான் எதற்கும் பணியாதவர் ஆச்சே? ஆம், பேரன்பு கொண்ட கோட்டி, அந்த ஆதரவற்றோர் இல்லத்தில் பெண்களுக்கு எதிராக நடக்கும் அநீதிக்கொடூரங்கள் கண்டு பெருங்கோபங்கொண்டு சம்பவம் செய்கிறார். கையோடு காவல் துறையில் சரண்டராகவும் செய்கிறார். அவர் எப்படி விசாரிக்கப்படுகிறார்? என்ன தண்டனை? என்பதே இறுதிப் பட(ல)ம்.

இப்படி குற்றம், விசாரணை, தண்டனை மூன்றிலும் உறுதியாக நிற்பவனையே இந்த 'வணங்கான்' பாத்திரமாக சித்தரித்துள்ளார் பாலா.

அதிகாரத்திற்கென்று ஒரு சத்தம் இருக்கும். ஆனால் முன்பின் பாராதவர் மீதும் அன்பின் நிமித்தமாக ஒரு சத்தம் எழுப்பினால் அதுதான் கோட்டியின் சைகை மொழி.

கோட்டியாக அருண் விஜய் இந்த ஒரு படத்தை தமது ஒட்டுமொத்த மற்ற படங்களுக்கு போட்டியாக பாவித்திருக் கிறார். அதனாலயே என்னவோ பாவங்களை தட்டிக்கேட்கும் இக்கதா பாத்திரத்தில் தம் நடிப்பு பாவங்களை அள்ளித் தந்திருக்கிறார். அவரது தங்கையாக வரும் ரிதா, தனது கதாபாத்திரத்தின் வாயிலாக பல வளரிளம் பெண்களின் மனநலன் சிக்கல்களை ஆழமும் அழுத்தமுமாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

நீதிபதி குபேரனாக இயக்குநர் மிஷ்கின் கவனம் ஈர்க்கிறார். வழக் கறிஞரைப் பார்த்து 'லார்ட்ஷிப்'னுலாம் அழைக்க வேண்டாம், சட்டத்தில் அப்படிலாம் சொல்லவே இல்லை, ஐயா சாருனு கூப்பிடுங்கள்' என சொல்லும்போதும் சரி பிறகு வரும் 'ஆய்வாளர் ஆயவே இல்லயா!', 'அவங்க எங்க பிடிச்சாங்க, நான்தான் சரணடைந்தேன்... என்ன பார்த்து பயந்துட்டாங்க' ஆகிய, ஏகபோக வசனங்களின்போதும் காவல் துறை மற்றும் நீதித் துறைகளை பாலா தன் பாணியில் டார்ச்சர் செய்யத் தவறவில்லை. காவல் துறை சிறப்பு அதிகாரியாக வரும் இயக்குநர் சமுத்திரக்கனியும் தன் பங்களிப்பை படத்துக்கு தேவையான அளவில் தருகிறார்.

போக்சோ சட்டம் தவறாக பயன் படுத்தப்படுவதை சுட்டிக் காட்டும் விதத்தில் தொடங்கி, போலீஸ் ஸ்டே ஷனுக்குள் காவலர்களை அடிப்பது வரை சட்டத்துறையை சமரசமின்றி அடித்து துவைப்பதில் தான் ஒரு 'கோட்' (GOAT) என்பதை 'கோட்டி' கதாபாத்திரம் வழியாக மீண்டும் நிரூபிக்கிறார் பாலா.

'எல்லாருமா சேர்ந்து ஒரு நல்லவனை சிலுவையில் அறைஞ் சிடாதீங்க', 'எங்களுக்கு கண்ணுதான் இல்ல... ஆனால் கண்ணு தண்ணி வரும்', 'எல்லாம் நல்லாருக்கிற உங்களால மாற்றுத் திறனாளிகளான எங்க வலியை எப்படி உணர முடியும்?' போன்ற வசனங்களால் சாதி, மதம், இனம் தாண்டி ஒடுக்கத்தை பொதுமைப் படுத்தும் பாலா, "எங்களுக்கு நிகழ்வதுதான் ஒடுக்கம்; எங்களுக்கு நிகழ்வது மட்டும் தான் ஒடுக்கம்" என்கிற கழிவிரக்க மனநிலைக்கு சவுக்கடி கொடுத்து, மனித மாண்புகளின் மதிப்பீட்டு அடிப்படையில் "ஒடுக்கச் சமூகநீதி"யை நிறுவியிருக்கிறார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிகழும் கொடூரத்தை காட்சிப்படுத்திய விதத்தில் பாலா கண்ணியம் தவறி விட்டதாகவும், பொறுப்பற்ற முறையில் அவற்றை காட்சிப்படுத்தி இருப்பதாகவும் தோன்றலாம். ஆனால் தன் படத்தில் காட்டப்படும் கோட்டி தான் பாலா. சட்டம் தண்டிக்கும் என பொறுமையாக இராமல் தவறென்றால் மனம்போல் சென்று தண்டித்துவிட்டு சிறைசெல்லும் "கணக்குகள்" இல்லாதவன் கோட்டி. அப்படி மலைவாழ்ப் பழங்குடிகள் மனம்போல கணக்குகள் அற்ற உணர்ச்சி கள் மிகுந்த புறபுனைவுல கோட்டி தான் பாலா. தான் வேறாகவும் தான் படைக்கும் நாயகன் வேறாகவும் இல்லாதிருப்பது கூட பாலாவின் இந்தவிதமான திரை மொழிக்கு காரணமாக இருக்கலாம். எனினும் இவை போன்ற காட்சிகளின் தாக்கத்தின் பாதிப்பினால் எதிர்காலத்தில் ஒரு கோட்டி உருவாகி விடக்கூடாது என்பதைக்கருதி, கோட்டிகள் மீது அக்கறை கொண்ட பாலா இனியுமாவது இப்படியான காட்சிப்படுத்தும் விதங்களை குறைத்துக் கொள்ளலாம். அப்போது தான் இந்த கம்பேக் மீண்டும் பேக்கில் போகாமல் இருக்க உதவும்.

'இவன் யாரோ.. இவன் யாரோ', 'யாரோ இவன் யாரோ இவன்', 'யாரோ இவள் இவள் யாரோ' ஆகிய பல ஹிட் பாடல்கள் வரிசையில் இப்படத்தில், 'யாரோ நீ யாரோ' பாடல் ஜி.வி.பிரகாஷ் இசையில் மனதில் ஒட்டிக்கொள்கிறது.

பாடல்களில் ஜீவி கொண்டுவந்த ஜீவனை பின்னணி இசையில் சாம். சி.எஸ். கொண்டு வந்திருக்கலாம். இருப்பினும் கதையின் விறுவிறுப்பை விழிப்புணர்வோடு கடத்துகிறார். குமரிக்கடலில் வானளாவி உயர்ந்து நிற்கும் வள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும், படகு போக்குவரத்தையும் காட்சிப்படுத்திய தில் முத்தெடுக்கிறது ஒளிப்பதிவாளர் ஆர்.பி.குருதேவின் கேமரா.

செம்பட்டை நாயகன், திருநங்கை அனுதாபம், தேவாலய ஃபாதர், கிறிஸ்தவ பகடி, மாமி & சாமிக்கு குட்டு, ஹைப்பர் ஆக்டிவ் நாயகி, ஆதரவற்ற மாற்றுத் தினாளிகள் & சிறப்புக் குழந்தைகள், அரவணைக்கும் எளிய மனிதர்கள், அக்கிரமம் செய்யும் வக்கிரக்காரர்களை உக்கிரமாக தாக்கும் அக்கறை நாயகன் என தான் பழகிய அச்சில் இன்னுமொரு நிகழ்காலக் கதையை வார்த்திருக்கிறது இந்த 'வணங்கான்'!

**சிவசங்கர், திரை எழுத்தாளர்**

**1-ம் பக்கத் தொடர்ச்சி**

# தமிழ் சினிமாவின் ஞானப்பழம் கே.பி.சுந்தராம்பாள்

மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது, துணைவன் படத்திற்காக பெற்ற சிறந்த தேசிய பின்னணிப் பாடகி விருது, தமிழ் இசைச்சங்கம் வழங்கிய இசைப்பேறிஞர் விருது உட்பட பல விருதுகளைப் பெற்றார் கே.பி.சுந்தராம்பாள்.

தன் சொந்த ஊரான கொடுமுடியில் "KBS தியேட்டர்" என்ற பெயரில் ஒரு திரையரங்கை கட்டி எம்ஜிஆர், கருணாநிதி, ஜெயலலிதா ஆகிய மூவரைக் கொண்டும் திறந்து வைத்தார். கலை, பக்தி, அரசியல், சுதந்திரம் போராட்டம் இன்று எல்லா வகையிலும் சமூகத்திற்கு தொண்டாற்றிய கே.பி.எஸ் அவர்கள் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் தேதி இயற்கை எய்தினார்.

தமிழ் திரை உலகில் இனியும் ஓர் சுந்தராம்பாள் உதிப்பது என்பது சாத்தியம் இல்லாதது. சுத்தமான தமிழ் உச்சரிப்பு, தொழில்பத்தி, பதிபக்தி, இறை பக்தி, சுதந்திர உணர்வு, அரசியல் என தான் அடியெடுத்து வைத்த அத்தனை துறைகளிலும் சாதித்துக் காட்டிய சாதனைப் பெண்மணி கே பி சுந்தராம்பாள் அவர்கள். கே.பி. சுந்தராம்பாள் அவர் களின் வாழ்க்கை எக்கால கலைஞர் களுக்கும் ஒரு பாடம். இவர் தமிழ் திரையுலகின் ஞானப்பழம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தமிழிசை காத்த இந்த கொடுமுடி கோகிலத்தின் புகழை நாம் பாடுவோம்.

**"அறிவில் அரியது அருளில் பெரியது**

**அள்ளி அள்ளி உண்ண உண்ண உனது தமிழ் இனியது"**

அன்பன் கார்த்திகேயன்
எழுத்தாளர்







Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**